# நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை இலங்கை, 2017

## 1. அறிமுகம்

இந் நாடு, நாட்டின் அனைத்து சமூகங்களுக்கும், மக்களுக்கும் பாரிய பாதிப்புக்களையும், அழிவுகளையும் ஏற்படுத்திய மூன்று தசாப்தகால யுத்தம் ஒன்றினை எதிர்கொண்டிருந்தது. இவ் ஆயுதப் போராட்டம் 2009 ஆண்டின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும், அது சமூகங்களிடையே நிலவிய நம்பிக்கைகளிலும், உறவுகளிலும் பாரிய விரிசல்களை ஏற்படுத்தி அவர்களிடையே வெறுப்புணர்வையும், பிழையான புரிதல்களையும் எச்சங்களாக விட்டுச் சென்றுள்ளது.

2015 ஆண்டில் இலங்கை அரசாங்கமானது, நல்லிணக்கம் தொடர்பான தனது அர்ப்பணிப்புக்கு புதிய தோற்றப்பாடொன்றை வழங்கியதுடன், தேசிய நல்லிணக்கத்திற்கான முயற்சியையும் முன்னெடுத்தது. அத்துடன் நல்லிணக்கம் பற்றி வலியுறுத்துகின்ற பரந்துபட்ட தேசிய கொள்கையொன்றுக்கான அவசியம் இன்னமும் நிலவுவதுடன், மேற்படி கொள்கையினூடாக அக் குறிக்கோளை அடைந்து கொள்ளவும் கருதுகின்றது எனலாம்.

## 2. முன்னுரை

மூன்று தசாப்தங்களாக நிலவிய ஆயுதமேந்திய போராட்டம் உள்ளடங்கலாக நீண்டகாலமாக நிலவிய சமூக, அரசியல் அழுத்தங்கள் காரணமாகவும் இந்நாட்டின் அனைத்து மக்களினதும் உயிர்களுக்கும், கௌரவத்திற்கும், பாதுகாப்புக்கும் ஏற்பட்ட பாதிப்பு, சேதம் மற்றும் அழிவு என்பன பற்றி **கவனத்திற் கொண்டும்**;

மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட தினம் தொட்டு, மக்களிடையே நம்பிக்கையீனங்கள், வெறுப்புணர்வு, பிழையான புரிதல்கள் என்பன நிலவி வருகின்றன என்பதை **ஏற்றுக்கொண்டும்**;

பிரச்சினைக்கான உண்மையான காரணம் நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் திருப்திப்படுத்துகின்ற பங்களிப்புடன்கூடிய அரசியல் அதிகார சபையொன்று குறித்து ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டமொன்று இல்லாமையும், அது இந்நாட்டின் வரலாறு நெடுகிலும் பல்வேறு காலகட்டங்களில் வெறுப்புணர்வாகவும், வன்முறையாகவுமே வெளிப்பட்டதென்பதை **நினைவுகூர்ந்தும்**;

கல்வி, வாழ்வாதாரம், தொழில்வாய்ப்பு மற்றும் நீதி உள்ளடங்களாக, எனினும் அதனுள் மட்டுப்படுத்தப்படாத பல்வேறு துறைகளில் சரிநிகராக பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பம்

குறைவாக உள்ளமையும் நாட்டில் நிலகின்ற வெறுப்புணர்வுக்கான பிரதான காரணம் என்பதை **புரிந்து கொண்டும்**;

சிவில் நிர்வாகத்திற்கு வலுசேர்த்தல், சொத்துக்கள் மற்றும் காணிகளை உரியவர்களிடம் மீள ஒப்படைத்தல், ஊடக சுதந்திரத்தை மேம்படுத்தல், வாழ்வாதார வழிவகைகளுக்கான சந்தர்ப்பங்களைத் தோற்றுவித்தல், காணாமற் போனவர்களினதும் அவர்களது உறவினர்களதும் உரித்துரிமைகளையும், அவர்களது அபிலாசைகளையும் பேணிப் பாதுகாத்தல் ஆகியன உள்ளடங்கலாக, எனினும் அதனுள் வரையறுக்கப்படாத மேலும் நடவடிக்கைகள் ஊடாக அரசாங்கத்திடையேயும், மக்களிடையேயும் சிறந்த உறவுகளை மீள கட்டியெழுப்பும் **எதிர்பார்ப்புடனும்**;

இலங்கையின் தனித்துவத்தை பேணிப் பாதுகாத்தும், கொள்கை, சட்டம், கல்வி மற்றும் பயன்பாடுகளினூடாக பல்வகைமை மற்றும் கலாசார பன்மைத்துவத்துவம் என்பவற்றுக்கு அங்கீகாரமளித்தும் மொழி, மரபுரிமைகள் தொடர்பாக ஒவ்வொரு நபருக்குமுள்ள உரிமைகளுக்கு மதிப்பளித்தும்; கலந்துரையாடல், தீர்ப்பளித்தல், ஓரங்கட்டுதல் மற்றும் மோதல் என்பன மீண்டும் தலைதூக்காதவாறு அவற்றைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளின் ஊடாக அனைத்து இலங்கையர்களிடையேயும் ஒற்றுமை பற்றிய வலுவானதோர் புரிந்துணர்வை ஏற்படுத்துமுகமாக தேசியம் தொடர்பான எண்ணக்கருவைத் தோற்றுவித்து தேசிய ஒருமைப்பாட்டிற்கு வலிமை சேர்ப்பதற்கு உணர்வுபூர்வமான முயற்சிகளை எடுப்பதற்கு **உறுதிபூண்டும்;**

மொழி, சட்டம் தொடர்பாக அரசியலமைப்பு ரீதியாக ஓர் தராதரத்தை வழங்குதல் மற்றும் தேசிய மும்மொழி கொள்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றமையை பின்புலமாக கொண்டு மொழிக் கொள்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய தேசிய ஒருமைப்பாடு பற்றிய **உணர்வுடனும்**;

அரசாங்க, தனியார் துறைகளிலும், நாடுபூராவும் பரந்துபட்டளவில் மொழிக் கொள்கை மற்றும் மொழிச் சட்டத்தை அமுல்படுத்தும் **எதிர்பார்ப்புடனும்**;

தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னுரையாக மொழிக் கொள்கையை **இனங்கண்டும்**;

குற்றம் புரிந்திருப்பின் அதற்குரிய தண்டனை வழங்காதிருப்பதற்கு எதிராக சண்டையிட்டும், சட்டத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டியும் ஒருபுறம் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளையும், மறுபுறம் பொருளாதார சமூக அரசியல் கலாசார உரிமைகளையும் உள்ளடக்கியதாக அனைத்து பிரசைகளினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் குறிக்கோளை **முதன்மையாக கொண்டும்**;

மோதல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனித் தனியாகவும், சமூக மட்டத்திலும் ஆகிய இரு வகையிலும் ஆற்றுப்படுத்தும் செயன்முறைகளை மக்கள் மற்றும் சமூக மட்டங்களில் முழுமையாக முன்னெடுப்பதற்கு **உறுதிபூண்டும்**;

இலங்கையின் அனைத்து மக்களுக்கும் உரியவாறு தேசிய விவரணம் ஒன்றினை கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி **அவதானம் செலுத்தியும்;**

தமக்கு அனைத்து உரித்துமுள்ளதாக உணரக்கூடிய சமூகமொன்றையும், அனைத்து இலங்கை பிரசைகளுக்கும் சாத்தியமான பூரண அங்கீகாரம் பெற்ற சுற்றாடல் ஒன்றையும் உருவாக்குவதற்காக **அர்ப்பணிப்புடனும்**;

கடந்தகால நிகழ்வுகள் மீள தலைதூக்காதவாறு உறுதியளித்தல் மற்றும் நல்லிணக்க தொடர்பான எதிர்கால முனைப்பு ஆகியவற்றின் ஊடாக இரு வகையான புத்துணர்ச்சியுடன் பல்தரப்பு செயற்பாடுகளுக்கான அரசாங்கத்தின் பூரண ஊக்குவிப்புக்கள் குறித்து **அழைப்பு விடுத்தும்**;

சனநாயகம், நல்லாட்சி, மொழி மற்றும் மரபுரிமைகள் சார்ந்த உரிமைகள் உள்ளடங்கலாக மனித உரிமை, சட்டத்தின் ஆதிக்கம், தேசிய ஐக்கியம் மற்றும் பல்வகைமை என்பவற்றுக்கு அங்கீகாரமளிக்கும் சமூக சகவாழ்வு ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு **இந் நல்லிணக்க மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை** மறுசீரமைக்கப்படுகின்றது.

## 3. குறிக்கோள்

1. நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு சம்பந்தமாக அரசாங்க கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்தல்
2. கடந்தகால வன்முறை மற்றும் மோதலுக்கான தீர்வுகளை ஆராய்ந்து, இந் நாட்டின் அனைத்து மக்களிடையேயும் சமுதாயங்களிடையேயும் தேசிய ஒருமைப்பாட்டையும், சமாதானத்தையும், சகவாழ்வையும் ஏற்படுத்தும் பொருட்டு, தேசிய நல்லிணக்கத்தையும், சகவாழ்வினையும் கட்டியெழுப்புவதற்கான பங்களிப்புடன் கூடிய எதிர்காலத்தை தோற்றுவிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்.
3. மற்றும் தேசிய ஒற்றுமை ஆகிய முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காக நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பாக செயலாற்றுகின்ற அனைத்து பங்காளர்களுக்கும் வழிகாட்டிக் கோவையொன்றை தயாரித்தல்.

## 4. நியாயப்பாடு

- இந் நாட்டின் அனைத்து சமூகத்திற்கும் நலன் பயக்காத மற்றும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படாத பணிகள் தொடர்பாக ஒருங்கிணைந்த, முழுமையான, விரிவான வகையில் ஆராயப்படுதல் வேண்டும்.

- சமாதானம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான முனைப்புக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்ற போதிலும் இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட உறுதிமிக்க கொள்கைகள் எதுவுமில்லை; ஆதலால் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான இக் கொள்கையானது அவ் இடைவெளியை நிரப்பும் என்பதில் சந்தேகமில்லை.

- பல்வேறு பங்காளர்களினாலும் இச் செயன்முறை தொடர்பாக தயாரிக்கப்படுகின்ற அனைத்துவித சமாதானம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு பற்றிய முனைப்புக்கள் சம்பந்தமான திட்டமிடல், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒத்திணக்கம் மற்றும் நிலைப்புடைமைகளை உருவாக்குவது அவசியமாகும்.

- அரசாங்கம், மக்களது பங்களிப்புடன் கூடிய தொலைநோக்கை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து நன்குணர்ந்து, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு சம்பந்தமாக செயற்படுகின்ற அனைத்து பங்காளர்களிடையேயும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் மத்திய நிலையமாக செயற்படும்.

## 5. கொள்கைசார் நெறிமுறைகள்

**சட்டக் கோவைகளையும், ஆலோசனை கோவைகளையும் உருவாக்கும் போது அடிப்படை தயாரிக்கப்பட்டு அதனைச் செயற்படுத்தக்கூடிய நெறிமுறைகள், நீண்டகால இலக்குக் கோவைகள், தேசிய நல்லிணக்கம், சகவாழ்வு என்பன தொடர்பாக திட்டமிடல் மற்றும் அதனை விருத்தி செய்வதற்கான சட்டக் கோவைகளையும், ஆலோசனைக் கோவைகளையும் தயாரித்தல்.**

**சமவுரிமை**

- சகல தேசிய கொள்கைகளிலும், சட்டங்களிலும், செயற்பாடுகளிலும் இன்றியமையாத விடயமாக சமாதானம் மற்றும் சம உரிமைக்கான பெறுமானங்கள் சிறந்தமுறையில், நிர்வாக ரீதியாக கையாளப்படல்.

- நல்லிணக்கத்திற்கான இன்றியமையாத காரணியாக அனைத்து சமுதாயங்களும் முகங்கொடுத்த துயரங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு செவி சாய்க்கும் அரசியல் இணக்கப்பாட்டினை அடைந்து கொள்ளும் ஒரு முறையாக அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டினை ஆதரித்தல்.

- நாட்டின் அனைத்துப் பிரசைகளுக்கும், சமுதாயங்களுக்கும் சேவைகளையும், வாய்ப்புக்களையும் சம உரிமையுடன் வழங்குவதை உறுதிப்படுத்தல்.

- அனைத்து தேசிய முக்கியத்துவங்களிலும் சம உரிமை வழங்குவதை உறுதிப்படுத்தல்; நாடு பூராவும் தாக்கத்திற்குள்ளாகத்தக்க மட்டத்திலுள்ள மகளிருக்கு பாதுகாப்பு பொறிமுறையொன்றை உருவாக்குதல்; வன்முறைகளுக்குட்பட்ட மகளிருக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் நட்டஈடு வழங்குதல்; தீர்மானமெடுக்கும் பங்காளர்கள், நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான பணிகளின் போது மாற்றமுறு முகவர்களாக மகளிர் நிறுவனங்களை மேம்படுத்தல்

- சந்தேக கண்கொண்டு நோக்காது, பாகுபாடு காட்டாது, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டத்திலான அனைத்துவித சட்டபூர்வ, சமூக, அரசியல், நிர்வாக ரீதியான பொறிமுறைகளிலும் சகல பிரசைளுக்கும் சமமான வாய்ப்புக்களுடன், சுயமாக அவற்றை அணுகுவதற்கான இயலுமையை உறுதிப்படுத்தல்.

**மனித உரிமைகள்**

- எந்தவொரு நபருக்கும் பாரபட்சம் காட்டாது, அனைத்து பிரசைகளுக்கும், தனிநபர் குழுக்களுக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை சமமான வகையில் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் சகல முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். அரசாங்கத்தினால் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கான பொறிமுறையொன்று இருக்க வேண்டியதுடன் சட்டத்தின் மேலான ஆதிக்கம், நீதியான நிர்வாகம், விசாரணைகள், சமநிலையுடன் கூடிய உரிமைகளைக் கொண்ட கலாசாரம், சனநாயக கட்டமைப்புக்கள் என்பவற்றைத் தயாரிப்பதற்கு கல்விசார் நடவடிக்கைகளை எடுப்பது பற்றிய முறைமைக்கான சாத்தியப்பாடுகள் என்பன ஆராயப்படல் வேண்டும். இவ் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமான தகுவிதிகள் நீதி முறைமை மூலம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

- பொருளாதார, சமூக மற்றும் வளங்களை உச்சளவில் பயன்படுத்துவதனூடாக கலாசார உரிமைகளை பேணிப்பாதுகாப்பதற்கும், கௌரவமளிப்பதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்குமான இணைக்கப்பாடுகள் உள்ளடங்கலாக நடத்தை ரீதியான மற்றும் விளைவுசார் இணைக்கப்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளன. இவ் உரிமைகள் அமுல்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுதுவதற்கு நீதிமன்ற முறைமையானது முக்கிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

- அனைத்து மனிதரினதும் விருப்பு வெறுப்புக்களை மதித்தும், உரிமைகளைப் பாதுகாத்தும் அனைத்துப் பிரசைகளினதும் அபிமானத்தை வென்றெடுத்தல்.

மனித விருப்புவெறுப்புக்களுக்கு மதிப்பளித்தல் என்பது ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கையை கண்ணியப்படுத்துவதாகும். அத்துடன் தனித் தனியாகவும், தேசிய ரீதியாக தனிநபர்களாகவும், குழும செயற்பாடுகளாகவும் இயங்குவதற்கான விருப்பினை இற்றைவரையாக்குவது அத்தியாவசியமாகும்.

**மொழியியல் உரிமை**

- அரச பொறிமுறையானது, இலங்கை அரசியலமைப்பின் **IV** ஆம் அத்தியாயத்தின் 18 இல் இருந்து 25 வரையிலான மொழிக் கொள்கைக்கு உரிய பகுதிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளதுடன், தேசிய மும்மொழிக் கொள்கை மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் அரச கருமமொழிகளாவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அமைச்சரவையினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

- அரச பொறிமுறையினால் சிங்கள மொழியை நிர்வாக மொழியாக பயன்படுத்தி பொது அறிக்கைகளும், தமிழ் மொழியை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயன்படுத்துவது தவிர இலங்கையின் ஏனைய அனைத்து மாகாணங்களினதும், அனைத்து அரச நிறுவனங்களினதும், சகல நடவடிக்கைகளும் அரசியலமைப்பின் **IV** ஆம் அத்தியாயத்தின் 22 (1) ஆம் பகுதிக்கமைய பயன்படுதுதல் வேண்டும்.

- சனாதிபதி அவர்கள் பிரகடனப்படுத்திய, இரு மொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளைத் தாபித்தல் மற்றும் யாப்பு ரீதியான ஏற்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்தினால் ஆராயப்பட்டு அதாவது சனாதிபதியினால் உதவி அரசாங்க முகவர் பிரிவுகளின் எந்தவொரு அலகுக்கும் உரிய சிங்களம் அல்லது தமிழ் மொழி பேசுகின்ற சிறுபான்மை சனத்தொகைக்கு அமைய போதுமானவாறு அவதானம் செலுத்தி, அப் பிரதேசத்தில் உள்ள முழுமொத்த சனத்தொகையின் அடிப்படையில், சிங்களம் மற்றும் தமிழ் அல்லது அப்பிரதேசத்தில் உள்ள மாகாண நிர்வாக மொழியாக பயன்படுத்தும் வரையில் ஒரு மொழியானது, அரசியலமைப்பின் **IV** ஆம் அத்தியாயத்தின் 22(1) பகுதிக்கமைய அப்பிரதேசத்திற்கான நிர்வாக மொழியாக பயன்படுத்தப்படும்

- தற்போது தேசிய அடிப்படையில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மொழிக்கொள்கை மற்றும் மொழிச் சட்டத்தை வரவேற்று, சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னுரையாக மொழிக்கொள்கை மற்றும் சட்டத்தை நிலைநாட்டும் பொருட்டு ஊக்கமளித்தல்.

- மத்திய அரசின், மாகாண அரசின் அல்லது உள்ளூராட்சி கட்டமைப்பில் அல்லது அனைத்து அரச நிறுவனங்களிலும் தமது விருப்பின் பேரில், அனைத்து

பிரசைகளும் அவர்களது சுய விருப்பின் பேரில் எந்தவொரு அரசகரும மொழியூடாகவும் அல்லது இணைப்பு மொழியூடாகவும் எழுத்துமூலமான அல்லது வாய்மொழிமூலமான பதிலைப் பெற்றுக் கொள்வதற்கான நிலைமையை உருவாக்குவதற்கு சட்டபூர்வமானதும், கொள்கைசார்ந்த வகையிலும் அரசு இணைக்கப்பாட்டினைத் தெரிவித்துள்ளது.

- அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளக மற்றும் வெளிப்புற குறியீட்டு பதாகைள் மற்றும் மக்களால் பயன்படுத்தப்படும் மாதிரிப்படிவங்கள் என்பன அவை அரசாங்க, மாகாண அரசாங்க, உள்ளூராட்சி நிறுவங்கள் ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்த வேண்டிய பொறுப்பு சட்டரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் அரசாங்கத்திற்கு கடப்பாடாகும்.

- இலங்கையின் அரசியலமைப்பின் **IV** ஆம் அத்தியாயத்தில் உள்ளவாறு அரசுருமமொழி மற்றும் இணைப்பு மொழிகள் நீதிமன்றங்களில், சட்டவாக்கபூர்வ மொழிகளில், நீதிமன்ற மொழிகளில், பாடசாலைகளில் ஆலோசனை வழங்கப்படும் மொழிகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

**தேசிய சகவாழ்வு மற்றும் பல்வகைமை**

- அரசாங்கத்தினால், தேசத்தை நேசிக்கும் அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி சட்டரீதியாகவும், கொள்கை ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் இந்நாட்டில் சிறந்த குடியுரிமையை உருவாக்கும் நோக்குடன், நாட்டின் தனித்துவத்தை அடையாளப்படுத்தி, இலங்கையர்களாக தலைநிமிர்ந்து, தேசத்தின் பல்வகைமையை உணர்ந்து, கலாசார செறிவுமிக்க வகையில் பல சமயத்தினராக, பன்மொழி பேசுகின்றவர்களாக, பல்லினத்தவர்களாக தேசிய சகவாழ்வின் பிரதான எண்ணக்கருவுக்கு அவசியமான உளப்பாங்கினை விருத்தி செய்தல்

- கடந்தகால கசப்பான நிகழ்வுகள் மீண்டும் நிகழாத வண்ணம் கலந்துரையாடல்கள், தலையீடுகள் மற்றும் செயற்பாடுகள் ஊடாக அனைத்து இலங்கை பிரசைகளும் ஒன்றாக வாழ்வதற்கான உணர்வுகளை வலுப்படுத்தும் பொருட்டு நாம் அனைவரும் இத் தேசத்தவர்கள் எனும் உணர்வினை சமூக - அரசியல் ரீதியாக விருத்தி செய்யும் அதே வேளை மொழி, சமய, கலாசார உரிமைகள் பற்றி ஒவ்வொருத்தருக்குமுள்ள உரிமையை உறுதிபட மக்களுக்கும், அரசாங்க பொறிமுறைக்கும் தலைமைத்துவ, வழிகாட்டல்களை உறுதியுடன்

வழங்குவதுடன், அவை அரசாங்கத்தினால் கொள்கை ரீதயாகவும், சட்டம், கல்வி, அனுபவ ரீதியாகவும் முன்னெடுக்கப்படவும் வேண்டும்.

- ஒடுக்கப்பட்ட சமுகத்தின் பங்களிப்பினை முறையாகப் பெற்று, அவர்களைத் தீர்மானமெடுக்கும் சக்தியாக மாத்திரமன்றி வாய்ப்புக்களையும், சேவைகளையும் அணுகச் செய்யும் பொருட்டு, ஊக்கமுடன் வலுவூட்டுவதற்கான உரிய பொறிமுறைகளை தயாரிப்பதன் ஊடாக அனைத்தையும் கொண்ட நிறைவான சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முனைப்புடன் செயற்படுதல் வேண்டும்.

- இலங்கையின் சனத்தொகையில் பல்வகைமையை பறைசாற்றும் வகையில் அரசாங்க சேவையிலும் நீதிமன்ற முறைமையிலும் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

- முழுமொத்த சமுகத்தில் தானும் ஒரு பங்காளனாக இருப்பதனை உணர்த்துகின்றவாறு அனைத்து மக்களுக்கும் குடியுரிமை பற்றிய எண்ணக்கருவை மேம்படுத்தல். இவ் அடிப்படையில் தமது துயரங்களுக்கு செவி சாய்க்கும் முறையொன்றை சட்டசபையூடாக மேற்கொண்டு நட்டஈடு வழங்கப்படுவது பற்றி உணர்த்த வேண்டியுள்ளதுடன் அதனூடாக புதிதாக மோதல் உருவாகாமலும், மீள வன்முறைகள் தொடராமலும் தடுப்பதற்கு வழியமைக்கும்.

- மகளிரை – குடும்பத் தலைவிகளாக கொண்ட, யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்ட, பாலியல் – வன்முறைக்குள்ளான - ஆகியோரை அடிப்படையாக கொண்டதும் வன்முறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட, பிள்ளைகள் இளைஞர்கள், உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்தவர்கள், காணாமற் போனவர்கள் இடம்பெயர்ந்தவர்களின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள் படைவீரர்களின் குடும்பங்கள், அங்கவீனர்கள், மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் என வரையறுக்கப்படாது அவர்களையும் உள்ளடக்கிய யுத்தத்தினால் தாக்கத்திற்குள்ளான ஆபத்தான நிலையிலுள்ள குழுக்கள் தொடர்பான தேவைகள், வலுவூட்டல்களுடன் நின்றுவிடாமல் அவர்கள் பற்றி ஆராய்வதற்கும் அவதானஞ் செலுத்துவதற்கும் வேண்டும்.

**உரித்துடைமை**

- இந் நாட்டில் வசிப்பவர்கள், புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் மற்றும் இலங்கை வம்சாவளியைக் கொண்ட அனைத்து பிரசைகள் ஆகிய

அனைவரினதும் அயராத பங்களிப்பினை அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பாக பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அவை நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

- நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு ஆகிய செயற்பாடுகளில், இன்றியமையாத பங்காளர்களாக தீர்மானமெடுக்கும் கட்டமைப்பில் கலந்துகொள்ளச் செய்வதன் ஊடாக மகளிர் மற்றும் இளைஞர்களை ஊக்குவித்தல்

- முன்னேற்றகரமானதும், நியாயமானதுமான நிலைமைகளின் கீழ் சகவாழ்வுடன் இத் தடைகளைத் துடைத்தெறிவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு தமக்கு உரித்துடைய விடயங்களில் கலந்து கொள்ளல், அத்துடன் அதற்கிணங்கிச் செயற்படுவதுடன் அதனை வரைவிலக்கணப்படுத்தல், அதனை செயற்படுத்தும் பொருட்டு சகல சமுகங்களுக்கும் உரிய குறித்தொதுக்கப்பட்ட பங்காளர்கள், அவற்றுள் வரையறுக்கப்படாத போதிலும் அவை உட்பட அதாவது வீட்டு அலகுகளில் மகளிரை குடும்பத் தலைவர்களாக கொண்ட குடும்பங்கள், யுத்தம் காரணாக விதவைகளாக்கப்பட்டவர்கள், பிள்ளைகளும் இளைஞர்களும், உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த மக்கள், காணாமறபோன, புலம்பெயர்ந்த குடும்பங்கள், முன்னாள் போராளிகள், படைவீரர்கள், அங்கவீனமுற்றவர்கள், மீளக்குடியமர்ந்தவர்கள், சமூக ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மாத்திரமின்றி அனைத்து சமுகங்களையும் சார்ந்த வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை வம்சாவளியினர் ஆகியோர் வெவ்வேறாக முகங்கொடுக்கும் தடைகளை ஒரு நிர்வாகத்தின் கீழ் விசாரணைக்குட்படுத்துதல்.

**நீதி மற்றும் சட்ட ஆளுகை**

- சிறந்த முறையிலும் துரிதமாகவும் கையாளக்கூடியவாறு நீதியை நிலைநாட்டுவதற்குரியவாறு அமைப்பினை உருவாக்குதல், அதனை அணுகுதலுக்கான அவகாசம் வழங்கும் பொருட்டு சட்ட முறைமையை தேவைக்கேற்ப வலுப்படுத்தல் மற்றும் சட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

- சமமானதும், தாம் அறிந்துள்ளதுமான நீதியை அணுகுவது சம்பந்தமாக செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சட்டத்தையும் சட்ட முறைகளையும் பேணுதல், நியாயமான, பக்கச்சார்பற்ற, சிறந்த மற்றும் இலகுவான முறையில் நீதியை நிலைநாட்டுவதற்குத் தகுதிவாய்ந்த நீதித்துறை ஒன்றினைப் போன்று நியாயத்தை நடைமுறைப்படுத்தல்.

- மோதலின் விளைவாக பாதிக்கப்பட்டும், இழப்புக்களுக்கும் உள்ளானவர்கள் என இனங்காணப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் பொருட்டு

தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுத்தல், நீதி மற்றும் நட்டஈடு செலுத்தும் போதும், அதன் பின்னரும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

- எந்தவொரு இனப் பிரிவையும் கவனத்திற்கொள்ளாது, போதிய நியமங்களில் அமைக்கப்படாத சட்டங்களை திருத்தியமைத்தல் / மீளமைத்தல் / இரத்துச் செய்தல்; மற்றும் நல்லிணக்கத்தை தூண்டுவதற்கு அவசியமான சட்டங்களை அறிமுகப்படுத்தல்.

- சட்டத்தின் முன் அனைவரும் சமன் எனும் வகையிலான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைக்களை எடுத்தல்.

- பொதுவாக மக்களுக்கு தாம் வாழக்கூடிய சாதாரண வாழ்க்கை முறையொன்றையும், அதற்கான விருப்பினையும் தெரிவித்தும், சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தியும், வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேடமாக சாத்தியப்பாடுகளை வழங்கியும், நல்லிணக்கம் தொடர்பாக கட்டியெழுப்பப்படும் முன்னெடுப்புக்களது பொருளாதார நியாயப்பாட்டினை உறுதிப்படுதல்.

- சமுதாயங்கள் மற்றும் மக்களிடையே – தலையீடு மற்றும் குறைநிவர்த்தி வழிமுறைகள் என்பவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாது அதனையும் உள்ளடக்கிய – தேசிய மட்டத்தில் நீதியை நிலைநிறுத்தி, நட்டஈட்டுப் பொறிமுறை மட்டம் குறித்து கண்காணித்தல் மற்றும் இயைபான, சாத்தியப்பாடு குறைவான எதிர்வினைகளை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பிரசைகள் முகங்கொடுக்கின்ற இன்னல்களுக்கும், அவர்களது விருப்பு வெறுப்புக்களுக்கும் செவி சாய்க்கின்ற கலாசாரமொன்றை கட்டியெழுப்பும் பொருட்டு அரசாங்க கட்டமைப்புக்களை வலுவூட்டல் மற்றும் அதன் மூலம் எதிர்வினையாற்றுவதற்கு தக்கவாறு அரசாங்கத்தின் திறனை விருத்தி செய்தல்.

- நிர்வாக மறுசீரமைப்பு, நீதித்துறை மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவின் - மறுசீரமைப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் இலக்குகளை முதன்மையாக கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள்

## வலுவாதார அபிவிருத்தி

- அபிவிருத்திக்கான உரிமையை அடிப்படையாக கொண்ட பிரவேசமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் மூலம் அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது பற்றி வலியுறுத்தல்.

- அபிவிருத்திக் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரிக்கும் போது பாதிக்கப்பட்ட மக்கள், மகளிர் மற்றும் இளைஞர்களை ஊக்குவித்து, அவர்களது பங்களிப்புக்களை உறுதிப்படுத்தல்.

- விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் காரணமாக தாக்கமுறும் மக்களின் ஆலோசனை மற்றும் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்

- இலங்கையில் சகவாழ்வு, ஒருங்கிணைப்பு, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு கட்டாயக் கல்வியுடன்கூடியதாக அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பநிலை, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலை கல்விக்காக உத்தரவாதமளிக்கும் எல்லாப் பிரயத்தனங்களும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

- சமமான அளவில் நாட்டிலுள்ள அனைத்து வலயங்களிலும், சமுகங்களிலும் நியாயமான அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.

## சமூகவுணர்வு

- இலங்கையில் நீடுநிலைத்த சமாதானம், சமூக இணக்கப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை அடைந்து கொள்ளும் பொருட்டு சம பங்காளர்களாக உரிமைகளையும் பொறுப்புக்களையும் ஆக்கபூர்வமான இடைச் செயற்பாடுகளையும் முதன்மையாக கொண்டு, மாற்றங்களுக்கு மதிப்பளிக்கின்றதும், நினைவு கூர்கின்றதுமான ஒத்துழைப்புக்கள் அடங்கிய கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புதல், முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் சனநாயகவாதத்தை உறுதிப்படுத்தும் பொருட்டும் அவர்களது கடப்பாட்டினை நிறைவேற்றும் பொருட்டும் இந்நாட்டுப் பிரசைகளிடையே பொறுப்புணர்வினை விருத்தி செய்தல்.

- இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பிரசைகளை விழிப்புணர்வூட்டுவதனூடாக பங்களிப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு நிலவுகின்ற சாதாரண கல்வியறிவின் மூலம் நல்லிணக்கம் தொடர்பான அடிப்படை அம்சங்களுக்கு உத்தரவாதமளித்தல்.

- பிரசைகளின் பொருளாதார, கலாசார, அரசியல் உட்பட வாழ்வின் அனைத்து மட்டங்களிலும் பரந்துபட்டுக் காணப்படும் நடுநிலைமை குறித்த கலாசாரம் ஒன்றை ஊக்குவிப்பதற்கு நன்கு நிர்வகிக்கப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**இடைநிலை நீதி**

- உண்மையை – கண்டறிதல்; நீதி; காணாமற்போன ஆட்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகளையும் தேவைகளையும் பாதுகாத்தல்; நட்டஈடு செலுத்துதல் மற்றும் இடைநிலை நீதி - போன்ற பரந்துபட்ட துறைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு சம்பந்தமாக ஆய்ந்தறிந்து, இவ் இடைநிலை நீதி சம்பந்தமான பொறிமுறையை அமுல்படுத்தும் காலஎல்லை, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நிறுவனங்கள், சமயத் தலைவர்கள், அரசியல் முகவர்கள் மற்றும் சிவில் சமூக தொடர் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புக்களுடன் பரந்துபட்ட செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் ஊடாக தாபிக்கப்பட்ட தன்னார்வ, இலக்கு ரீதியான, நம்பகரமான, தகுந்த வளங்கள் கையாளப்பட்ட பொறிமுறை ஊடாக இம் மேம்பாடுகளை அடைந்து கொள்வதற்கு அரசாங்கம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

## 6. குறுக்குவெட்டுமுக நெறிமுறைகள்

**நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களையும், செயற்பாடுகளையும் திட்டமிட்டு, செயற்படுத்துகின்ற அனைத்து பங்காளர்களுக்கும் உரியதான நல்லிணக்க வழிவகைகளை திட்டமிடுவது குறித்த கோட்பாட்டுக் கோவை.**

**மோதல் தொடர்பான உணர்வுதிறன்**

நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு நடவடிக்கைகளில் தலையிடுவதன் ஊடாக மோதல் உருவாதல் மற்றும் அது தீவிரமடையாது தடுப்பதை உறுதிப்படுத்தல். அந் நடவடிக்கைகளில் தலையிடுவதன் ஊடாக உருவாகின்ற சாதகமான மற்றும் எதிர்மறை தாக்கங்கள், அத் தலையீடுகளுக்கான சந்தர்ப்பங்கள், அச்

சந்தர்ப்பங்களின் எதிர்மறையாக உருவாக கூடிய தாக்கங்கள் குறித்து முறைப்படி ஆராய்வது இதனுள் அடங்குகின்றது.

**காலாசார புரிந்துணர்வு**

அனைத்துவித நல்லிணக்க நடவடிக்கைகளுக்கும் நலன்பயக்கும் ஒவ்வொரு கலாசாரங்களுக்கும் உரிய கலாசாரப் பெறுமானங்கள், கருத்துக்கள், நடத்தைகள் தொடர்பான பங்களிப்புக்களை வழங்கக்கூடிய சுற்றாடல் முறையொன்றினை உருவாக்குவதன் ஊடாக மூலோபாய மற்றும் செயற்படுத்துகை மட்டத்திலான கலாசார புரிந்துணர்வினை உருவாக்குவதற்கான முயற்சிளை வலுப்படுத்தல்

**பாதிக்கப்பட்டவர்களுக்கான குவிமயம்**

அனைத்து நல்லிணக்க செயற்பாடுகள் மூலமும் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கான உரிமைகள், தேவைப்பாடுகள், பாதுகாப்பு சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பது பற்றியும், பாதிக்கப்பட்ட ஆட்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிக்கும் வகையிலான அச் செயற்பாடுகளைத் திட்டமிடுவது பற்றி உறுதிப்படுத்தல் மற்றும் வெறுமனே கொள்கைகள் மற்றும் பயன்பெறுநர் ஆகிய விடயங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டவர்கள் பற்றி கரிசனை செலுத்துவதை உறுதிப்படுத்தல். இதன் மூலம் கருதப்படுவது, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு குறித்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் காலம் முழுதும் பாதிக்கப்பட்டவர்களது செயற்பாட்டு ரீதியான பங்களிப்புக்கள் இடம்பெறும் என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

**ஆண் பெண் பால்நிலை**

கொள்கை வகுப்பின் போதும் நல்லிணக்க மற்றும் சகவாழ்வு வழிவகைகளை திட்டமிடல் ஆகிய அனைத்து நடவடிக்கைளின் போதும், மகளிரின் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, பாதுகாப்பான வகையிலும், அவற்றை நிறைவேற்றும் வகையிலும், ஆண் பெண் பால்நிலையினரை எவ்வாறு ஈடுபடுத்துவது என்பது பற்றியும், அனைத்து நல்லிணக்க வழிவகைகளைகளின் ஊடாகவும் மகளிர் மற்றும் ஆண் பங்காளர்களிடையே நன்மதிப்புக்களை பேணும் வகையிலுமான கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புதல் மற்றும் மோதல், வன்முறை காரணமாக பெருந்தொகையான மகளிர் பாதிக்கப்பட்ட உள்ளமை பற்றியும் அது தொடர்பான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளமை பற்றியும், அவர்களை யதார்த்த நிலைக்குள்ளாக்க வேண்டியது பற்றியும் இனங்கண்டு, கொள்கை மற்றும் சகவாழ்வு நடவடிக்கைளில் அவர்களுக்கும் சமமான செயற்பாட்டு பங்களிப்பு உரித்தாக வேண்டியுள்ளதுடன், அவர்களது பங்களிப்பினையும் ஒத்துழைப்பினையும் அபிமானத்துடன் வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றதா என்பது பற்றி செயற்பாட்டு ரீதியாக கண்டறிதல்.

**விளைதிறன் மற்றும் வினைத்திறன்**

நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தலையீடுகள் தொடர்பான முக்கிய தேவைகளுக்கு அமைய வளங்களை சாதகமாக கையாள்வது பற்றியும், மிகவும் உசிதமான அணுகுமுறைகளைக் கையாள்வது பற்றியும் உறுதிப்படுத்தல். அத்துடன் அவ்வாறான வழிவகைகள் ஊடாக இனங்காணப்பட்ட வழிவகைகளின் ஊடாக இனங்காணப்பட்ட குழுக்களிடையே எதிர்பார்க்கப்படும் தாக்கங்கள் எற்படக்கூடும் என்பது பற்றி அவதானத்துடன் செயற்படுத்ல்.

**ஒருங்கிணைத்தல் மற்றும் குறைநிரப்பல்**

ஒருங்கிணைந்த நல்லிணக்க பிரயத்தனங்களை வலுப்படுத்தக் கூடியவாறு ஒவ்வொரு பங்காளர்களிடையேயும் அரசாங்கத்தினுள் மற்றும் அரசாங்கத்திற்கு வெளியே ஒருங்கிணைப்புப் பணிகளைப் பேணக்கூடியவாறு அனைத்துவித முயற்சிகளையும் எடுத்தல் மற்றும் நல்லிணக்கம் வழிவகைகளை வெறுமனே நடைமுறைப்படுத்துவதை தவிர்த்தல் மற்றும் அதற்குப் பதிலாக அன்னியோன்ய சமூக ரீதியான செல்வாக்கினையும் அன்னியோன்ய வளப்படுத்துகையயினையும் மேம்படுத்தக் கூடிய வகையிலான நல்லிணக்க மற்றும் சகவாழ்வு செயற்பாடுகளை மேம்படுத்தல்.

**தலைமைத்துவ மற்றும் வலுவாதாரம்**

நல்லிணக்க செயற்பாட்டினுள் நல்லிணக்கம் தொடர்பாக தீர்மானமிக்க புத்தாக்க அணுகுமுறையைக் கடைப்பிடித்து பங்காளர்களை ஊக்குவித்தல், சமூக தலைவர்கள் மற்றும் இன்னல்களுக்கும் துயரத்திற்கும் இலக்கான சமுதாய பிரதிநிதித்துவத்தை உருவாக்குதல், இலங்கையின் பல்வேறு இனக் குழுமங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற செயற்பாட்டாளர்களுள் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதியளித்தல், தேர்ச்சி மற்றும் ஒருமைப்பாட்டினை வெளிக்கொணரல், மக்கள் நம்பிக்கையை வென்றெடுத்தல், சமூக பங்களிப்பு சம்பந்தமான நம்பிக்கையை உருவாக்குதல், சமூகத்தில் உள்ள வளங்களை வலுப்படுத்தக்கூடிய வகையில் வலுவாதார மற்றும் வலுவான உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல் தொடர்பாக அனைத்து நல்லிணக்க செயற்பாடுகளிலும் ஒத்துழைப்பு இயலளவினை உருவாக்குதல், பண்பாடுகளுடன் கூடிய கலாசாரம் ஒன்றையும் பிரசைகளுக்கான சேவையையும் மேம்படுத்தக் கூடிய புத்தாக்க நெறிமுறைகள் மற்றும் தலைமைத்துவத்தை உருவாக்குதல்.

**தொலைநோக்கு மற்றும் புத்தாக்கம்**

தற்போதைய தேசிய மற்றும் ஒப்பீட்டு அனுபவங்களுடன் விசேட பின்புலம் ஒன்றுக்கு ஏற்றவாறு நல்லிணக்க முயற்சிகளை திட்டமிடல், தயாரித்தல், படைப்பாற்றல்மிக்க

முறைகளைக் கட்டியெழுப்புதல், கூட்டிணைத்தல், தாபித்தல் மற்றும் மோதல் சிந்தனைகளையும், மனோநிலையையும் ஆற்றுப்படுத்துவதற்கு அவகாசமளிக்கும் பொருட்டு புத்தாக்க முறைகளைக் கண்டுபிடித்தல் மற்றும் நல்லிணக்க, சகவாழ்வு வழிவகைகளை திட்டமிடும் போது உருவாக கூடிய மோதல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**தெளிவான மற்றும் ஒத்திணக்க தொடர்பாடல்**

உரிய பங்காளர்களிடையே ஆலோசனைகளுடன் பங்களிப்புடனும் நல்லிணக்கம் தொடர்பான தலையீடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல், சிவில் சமூகம் உட்பட ஒவ்வொரு பங்காளர்களுக்கும் செவி சாய்த்தல், மோதல், வன்முறை காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டவர்கள், ஏனைய தாக்கங்களுக்கு உட்பட்ட குழுக்கள் மற்றும் நாட்டின் நல்லிணக்க மேம்பாடு தொடர்பான தகவல்கள் என்பன பற்றி அரசாங்கத்தினால் தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். அவை கவனமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நெறிப்படுத்தப்படல் வேண்டும். மோதல் நிலைமைக்கான மூல காரணத்தை அறிந்து, அதற்கு மாற்றீடாக மக்களின் முன்னேற்பாடுகள், திட்டமிடல்களை உருவாக்குவதற்கு வசதியளிக்கும் ஆக்கபூர்வமான நடத்தைசார் மாற்றங்களை தோற்றுவித்தல், சம்பிரதாயபூர்வ மற்றும் அவ்வாறின்றிய ஊடக நடமாடுகைகளூடாக பொது மக்களை ஈடுபடுத்தி, அரசாங்கத்தினால் ஒத்துழைப்புடன் கூடிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

## 7. செயற்பாட்டு மூலோபாயங்கள்

**கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூலோபாயங்களை பயன்படுத்தி நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான இத் தேசிய கொள்கையானது நடைமுறைப்படுத்தப்படும்.**

1. நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை மேம்படுத்தல்
2. இன, மத, மொழி, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளின் அடிப்படையில் இலங்கை சமூகத்தில் நிலவுகின்ற தனித்துவம் காரணமாக பல ஆண்டுகளாக புறந்தள்ளப்பட்டவற்றை இனங்காணல்

3. நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய திட்டத்தினுள் புறந்தள்ளப்பட்டவர்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல்'
4. நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு போன்று தேசிய செயற்பாட்டு திட்டம் பற்றிய தேசிய கொள்கை சம்பந்தமாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் மற்றும் அது தொடர்பாக கல்வியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
5. வருடாந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அரச நிறுவனங்கள் மற்றும் தற்போதைய தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றினுள் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான இத் தேசிய கொள்கையின் பெறுமானங்களை வலியுறுத்தல்.

## 8. செயற்படுத்துகை நிறுவனங்கள்

**நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான இத் தேசிய கொள்கை பின்வரும் நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.**

1. தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் நீடுநிலைத்த சமாதானம் ஆகியவற்றை இந்நாட்டில் நிலைநிறுத்தும் பொருட்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தேசிய கொள்கையை வகுத்தல்; மற்றும் மோதல் மீண்டும் தலைதூக்காதவாறு அதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஊடாக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்குவது குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை முதன்மையாக கொண்டு 2015.09.21 அந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக தாபிக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் (ONUR) உரித்தாகும் **தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு.**

2. (அ) மொழிக் கொள்கை மற்றும் சட்டத்தை மேம்படுத்தல், மொழிச் சட்டத்தை மீறுவது தொடர்பாக செயற்படுத்தல் மற்றும் சட்டம் உள்ளடங்கலாக சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்தல், அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் தேசிய மொழிகள் மற்றும் இணைப்பு மொழிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக உரிய வசதிகளை வழங்குதல், தேவையுடையவர்களுக்கு மொழியைக் கற்பித்தல், மொழி பெயர்ப்பாளர்கள், உரை பெயர்ப்பாளர்கள், ஆசிரியர்கள், பயிறுவிப்பாளர்கள், மொழிப் பாடநெறிகள் தொடர்பான பரீட்சைகளை ஒழுங்கமைத்தல் (ஆ) "

இலங்கையர் – அது எமது தனித்துவம்; பல்வகைமை – அது எமது வலிமை” எனும் அமைச்சரவை வாசகத்தை அடிப்படையாக கொண்ட பல்வேறு தனித்துவங்களுடன் மக்களிடையே சகவாழ்வினை கட்டியெழுப்பும் பொருட்டு தேசிய கலந்துரையாடல்களிடையே விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் (இ) சிவில் சமூக அமைப்புக்கள் (CSO), தன்னார்வ அமைப்புக்களின் தேசிய வலையமைப்புக்களை கட்டியெழுப்புதல், இயலளவு விருத்தி தொடர்பான சிவில் சமூக அமைப்புக்கள் (CSO) தொடர்பாக ஒத்துழைப்பு வழங்குதல், தேசிய முன்னுரிமைகளுக்கு இனங்காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், சர்வதேச தன்னார்வ அமைப்புக்களின் ஒத்துழைப்புக்கள் தொடர்பாக வசதியளித்தல் தொடர்பான சகவாழ்வு கலந்துரையாடல் அலுவலம் (CDD), மொழியுரிமைகள் பணிப்பாளர் அலுவலகம் (LRD), அரசகரும மொழிகள் திணைக்களம் (DOL), அரசகருமமொழிகள் ஆணைக்குழு (OLC), மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் (NILET), தன்னார்வ அமைப்புக்களின் தேசிய செயலகம் (NS-NGO) ஆகிய நிறுவனங்கள் தொடர்பாக 2015.09.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட **தேசிய கலந்துரையாடல் மற்றும் சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு.**

***3.*** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீளக் குடியமரத்தல் மற்றும் இந்து சமய அலுவல்கள் குறித்த விடயங்கள் குறித்த கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக 2015.09.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட **சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீளக் குடியமரத்தல் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு.**

***4.*** உண்மையை – கண்டறிதல், நீதி, காணாமற்போன ஆட்கள் மற்றும் தேவைகளையும் பாதுகாத்தல் ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய இடைநிலை நீதி சம்பந்தமான பொறிமுறையை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல், ஒருங்கிணைத்தல் தொடர்பாக 2015.12.25 ஆந் திகதிய அமைச்சரவைச் தீர்மானம் மூலம் தாபிக்கப்பட்ட **நல்லிணக்கம் பொறிமுறை தொடர்பான ஒருங்கிணைப்பு செயலகம்.**

END OF DOCUMENT